கண்காணிப்புப் பொறியாளர், பொ.ப.து., கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம், சேப்பாக்கம், சென்னை-5 அவர்களின் செயல்முறை ஆணை

முன்னிலை: திரு.க.ஆயிரத்தரசு இராசசேகரன், எம்.டெக்., எம்.பி.ஏ.,
கண்காணிப்புப் பொறியாளர், பொபது.,

செ.மு.எண்.நி2/ 890/2019/நாள் 23.09.2019

பொருள்: பணியமைப்பு - நேரடி நியமனம் - த.நா.அ.ப. தொகுதி - திரு.சி.சந்துரு, இளநிலை உதவியாளர் - தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் வாயிலாக பணி நியமனம் - பணிவரன்முறை மற்றும் தகுதிகாண் பருவம் துவக்கி ஆணை - வழங்குதல்.

பார்வை:
1. செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-3 அவர்களின் கடித எண்.1150/பி.எஸ்.டி.-எச்2/ 2019/ நாள் 18.02.2019.
2. முதன்மை தலைமைப் பொறியாளர் நீ.ஆ.து., மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொபது., சென்னை-5 அவர்களின் செயல்முறை ஆணை எண்.எஸ்3(3)/25366/2019 நாள் 25.02.2019.
3. இவ்வலுவலக செயல்முறை எண் நி2/890/2019 நாள் 08.03.2019.

*****

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பெற்ற 2015-2016, 2016-2017 மற்றும் 2017-2018ம் ஆண்டுகளுக்கான ஒருங்கிணைந்த குடிமைப் பணிகளுக்கான தேர்வு தொகுதி -IVன் வாயிலாக தெரிவு செய்யப்பட்டு, பார்வை (2) மற்றும் (3)ல் காணும் செயல்முறை ஆணைகளின்படி, இளநிலை உதவியாளராக இவ்வலுவலகத்திற்கு பணியமர்வு செய்யப்பட்ட திரு.சி.சந்துரு, அவர்களின் பணியினை இளநிலை உதவியாளராக பணியேற்ற நாளான 14.03.2019 முற்பகல் முதல் பணிவரன்முறைப்படுத்தி ஆணை வழங்கப்படுகிறது.

தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலை பணியாளர் விதி பொது விதி 23(அ) (i)ன் படி, இவர் இளநிலை உதவியாளராக பணியேற்ற நாளான 14.03.2019 முற்பகல் முதல் தகுதிகாண் பருவத்தில் வைக்கப்படுகிறார். இவர் இரண்டாண்டு தகுதிகாண் பருவ காலத்தை மூன்று ஆண்டு தொடர் பணியில் முடிக்க வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறது.

மேலும் இந்த தகுதிகாண் பருவகாலத்திற்குள் பவானிசாகர் பயிற்சி நிலையத்தில் நடத்தப்படும் அரசு அலுவலருக்கான அடிப்படை பயிற்சியில் கலந்து கொண்டு தேர்ச்சி பெற வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அறிவுக்கண்ணன்

கண்காணிப்புப் பொறியாளர் சார்பில் பொபது.,
கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம்
சேப்பாக்கம், சென்னை-5.

பெறுநர்
திரு.சி.சந்துரு, இளநிலை உதவியாளர்
கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம்,
சேப்பாக்கம், சென்னை-5.